**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**
**<u>அ.வ.எண். 514/2021</u>**

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23–ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | |
| த/பெ | : ராமசாமிகவுண்டர் | கிராமம் | |
| வயது | : | தாலுகா | |
| | : | மாவட்டம் | |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1.** நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் **25** வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். மேற்படி தொழில் உள்ள நெலிவு சுழிவுகள் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். ரியல் எஸ்டேட் தொழில் எனக்கு நல்ல அனுபவம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஒரு சொத்தை வாங்குவதாக இருந்தால் ஒரு நிபுணர் குழுவை வைத்து கலந்து ஆலோசனை செய்த பிறகு வாங்குவேன் என்றால் சரிதான் சில இடங்களில் புரோக்கர்கள் மூலம் நேரடியாகவும் வாங்குவேன். பிரதிவாதிகளை எனக்கு புரோக்கர் மூலமாக தெரியும்.

**2.** சோமு என்கிற புரோக்கர் பிரதிவாதிகளை எனக்கு அறிமுகப்படுத்தினார். மேற்படி சோமு **1–**ம் பிரதிவாதியை எனக்கு அறிமுகம் செய்தார். **2019** ஆம் வருடம் தான் அவர் எனக்கு அறிமுகம். இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகளை எனக்கு அறிமுகம் இல்லை என்று சொன்னால் சரிதான் **1–**ம் பிரதிவாதி தான் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்களது குடும்ப சூழ்நிலை குறித்து நான் தெரிந்து கொண்டேன் என்றால் நிலம் வாங்கிய காரணமாக தெரிந்து

கொண்டேன். ஒப்பந்தம் போடப்பட்ட போது ஆவணங்களை பார்த்தேன். ஒப்பந்த தேதி 05.07.2019 ஆகும். ஒப்பந்தம் போடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் ஆவணங்களை பார்த்தேன். மேற்படிஆவணங்களை பார்த்துவிட்டு இரண்டு நாட்களில் நான் ஒப்பந்தம் போட்டு விட்டேன் என்றால் சரிதான். எந்தெந்த ஆவணங்களை பார்த்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

3. எந்தெந்த சொத்துக்கான ஆவணங்களை நான் பார்வையிட்டேன் என்றால் 12 ஏக்கர் 13 சென்ட்க்கான ஆவணங்களை நான் பார்த்தேன். அது எந்தெந்த புல எண்களில் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஒவ்வொரு காலையும் எவ்வளவு விஸ்தீரணம் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்த்தேன். ஒப்பந்தம் போடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நிலத்தை பார்த்து விட்டு தான் ஒப்பந்தம் போட்டேன். ஆவணங்களை என்னுடைய அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். அன்றைய தேதியிலேயே பூமியை பார்த்து விட்டேன் என்றால் சரிதான்.

4. ஆவணங்களை பார்வையிட்ட விபரத்தை அறிவிப்பிலேயே வழக்கிலையோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலேயோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் யார் யாருக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்கள் என்று நான் பார்க்கவில்லை என்று சொன்னால் அது 1–ம் பிரதிவாதியின் குடும்ப சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்கள் வேணுகோபால் மற்றும் அவரது வாரிசுகள் பெயரில் உள்ளது. அவரது வாரிசுகள் பெயர் விஷ்ணு மற்றும் தேன்மொழி ஆகும். சட்டக்கருத்துறை பெறாமலே ஒப்பந்தம் செய்து விட்டேன் என்றால் சரிதான். சட்டக் கருத்துறை பெற்று தருவதாக பிரதிவாதி சொல்லி இருந்தார். சட்டக்கருதுறை பெற்று தருவதாக பிரதிவாதிகள் சொல்லியிருந்தார்கள் என்ற சங்கதியை முதன்முதலாக என்னுடைய குறுக்கு விசாரணையில் தான் நான் குறிப்பிடுகிறேன் என்று

சொன்னால் சரியல்ல.

5. சொத்து விபரம் தொடர்பாக நான் 1–ம் பிரதிவாதியிடம் நேரடியாக பேசி விட்டேன். தாவா சொத்துகக்கள் யார் யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்பது தெரிந்து கொண்டேனா என்றால் அது பிரதிவாதிகளின் பிரிவுபடாத குடும்ப சொத்துக்கள் ஆகும். குடும்ப உறுப்பினர்களுக்கு எவ்வளவு பாத்தியம் என்பது குறிப்பிட முடியாது என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதி மகன் விஷ்ணுவை கையெழுத்து போடும்போது தான் நான் பார்த்தேன். மேற்படி கையெழுத்தை என்னுடைய அலுவலகத்தில் வைத்து அவர்கள் போட்டார்கள். என்னுடைய அலுவலகம் திருப்பூரில் உள்ளது.

6. தாவா சொத்துக்கள் விற்பனைக்கு உள்ளதாக பிரதிவாதிகள் என்னிடம் நேரடியாக அணுகினார்களா என்றால் இல்லை முதலில் புரோக்கர் மூலமாக வந்தார்கள் அதன் பிறகு நேரடியாக வந்தார்கள். பிரதிவாதிகளுக்கு தாராபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எந்த காலையில் உள்ள நிலத்தை எனக்கு விற்பதாக சொன்னார்கள் என்று சொன்னால் அதை குறிப்பிட்டுச் சொல்ல முடியாது மொத்தமாக 12 ஏக்கர் 13 சென்ட் நிலத்தை விற்பதாக சொன்னார்கள். சோமு என்பவர் தான் புரோக்கர் ஆக இருந்த செயல்பட்டார் என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையிலும் அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் அவ்வாறு மேற்படி விபரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7.நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதை இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும்போது கூட நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அறிவிப்பு மற்றும் வழக்குரையில் நான் ரியல்எஸ்டேட் வேலை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தத்தை என்னுடைய தனிப்பட்ட பெயரில் நான்

ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். நிறுவனத்தின் இயக்குனர் என்ற தகுதியின் அடிப்படையிலோ அல்லது பங்குதாரர் என்ற அடிப்படையிலோ ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். தாவாவில் கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் தெரியவில்லை. எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற விபரமும் தாவாவில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் மேற்படி ஒப்பந்தம் யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதியவர் பெயர் இல்லை என்றாலும் சாட்சிகள் பெயர் மட்டும் தான் உள்ளது என்றாலும் சரிதான். மேற்படி ஆவணம் யாரால் தயாரிக்கப்பட்டது என்ற விபரமும் அதில் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் அது எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எத்தனை ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது என்ற விபரம் தற்போது எனக்கு நினைவில்லை. மேற்படி ஒப்பந்தம் பெயரளவிற்காக எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

9. நான் வழக்குடன் 29 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 16 ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களும் நான் வழக்கு போட்ட சமயத்தில் என் கைவசம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 18.09.2019 ஆம் வருடம் ரூபாய் 70 லட்சத்திற்கு ரசீது போடப்பட்டது. மேற்படி தேதியில் நான் ரொக்கமாக ரூபாய் 25 லட்சம் வைத்திருந்தேன். மேற்படி ரசீதை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் நான் ரூபாய் 25 லட்சம் ரொக்கமாக வைத்திருந்தேன் என்பதை காட்ட எந்தவிதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

10. வா.சா.ஆ.2 ரசீது எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. உண்மையிலேயே மேற்படி தேதியில் பணம் நான் கொடுத்திருந்தால் மேற்படி ரசீதின் தேதி எனக்கு நினைவிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்பட்டியலில் மேற்படி ரசீது ஒரு கோடியே 70 லட்ச ரூபாய்க்கு கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரசீது 70 லட்ச ரூபாய்க்கு மட்டும் தான் உள்ளது ஆனால் ஒப்பந்தத்தின் போது ரூபாய்கொடுக்கப்பட்டது இரண்டும் சேர்ந்து ஒரு கோடி 70 லட்சம் ஆகும். ஆவணப்பட்டியலில் அவ்வாறு குறிப்பாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ரசீதில் ஒரு நபரிடம் மட்டும் தான் நான் ரெவென்யு ஸ்டாம்பில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரசீதில் இரண்டாவது கையெழுத்தில் கே என்ற இனிஷியல் வேறு மை மைகொண்ட பேனாவில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால்சரிதான். மேற்படி கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

11. நான் 25 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்ததற்கு கணக்கு தாக்கல் செய்ய முடியும். மேற்படி 25 லட்ச ரூபாய் எனக்கு எப்படி வந்தது என்று நான் நிரூபிக்காத சூழ்நிலையில் மேற்படி பணமே என்னிடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பணத்தை எங்கிருந்து நான் பெற்றேன் என்பதற்கான கணக்குகள் இல்லை என்று சொன்னால் அதை என்னால் தாக்கல் செய்ய முடியும். வா.சா.ஆ.1 முறையான ஒப்பந்த வடிவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் ஒரு முறையான ஒப்பந்தம் எப்படி இருக்க வேண்டும் என்று எனக்கு தெரியும்

12. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முறையான ஒப்பந்தம் தான். ரசீதில் எவ்வளவு பிரதிவாதிகளுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று குறிப்பாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அவர்களது குடும்ப சொத்து என்பதால் மொத்தமாகத்தான் கொடுத்தோம். நான்கு பிரதிவாதிகளும் ஒரே நேரத்தில் வந்து வா.சா.ஆ.1ல் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எத்தனை மணிக்கு பணம்

மற்றும் வரவோலை வழங்கப்பட்டது என்று வழக்குரையிலோ அல்லது அறிவிப்பிலோ நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் நான் ரூபாய் ஒரு கோடி காசோலையாகத்தான் கொடுத்தேன். ஒப்பந்தத்தில் காலை எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிட்டு தான் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

13. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில்தன் தாவா சொத்தின் விபரங்கள் தாவாவில் குறிப்பிடப்பட்டது. ஒப்பந்தத்தில் நாற்புற எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தம் தொடர்பாக இரண்டு மூன்று நான்கு பிரதிவாதிகளை நான் அணுகவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மூன்று ல் நான்கு பிரதிவாதிகள் என்னைவிட இளையவர்கள் என்றால் சரிதான் எனவே அவர்களிடம் நான் நைஜியமாக பேசி என்ன ஒப்பந்தம் செய்கிறேன் என்பதை சரிவர விளக்கிச் சொல்லாமல் மேற்படி ஒப்பந்தத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுடைய பொருளாதார நிலையை சாதகமாக எடுத்துக்கொண்டு பிரதிவாதிகள் மீது என்னுடைய ஆதிக்கத்தை செலுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

14. நான் முதலில் அனுப்பிய அறிவிப்பின் தேதியை என்னால் குறிப்பிட முடியாது. மே மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1 முதல் 4 பிரதிவாதிகள் அதை மறுத்து பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பிற்கு நான் எந்த விதமான மறுப்பு அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் நான் பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துகளில் எவ்வளவு பாத்தியம் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் சட்டக் கருத்துறை வாங்கி தருவதாகத்தான் நாங்கள் பேசினோம். மேற்படி ஒப்பந்தம் நல்ல ஒப்பந்தம் தான்.

15. பதில் அறிவிப்பில் சொல்லப்பட்ட விவரங்கள் சரியானவை என்பதால் தான் அதை மறுத்து என்னால் மீண்டும் அறிவிப்பு அனுப்ப இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தை பார்வையிடும் போது தாவா சொத்தில் வில்லங்கம் உள்ளது என்பது எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல எனக்கு அப்போது தெரியவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்துகளில் வில்லங்கம் இருப்பதாக என்னிடம் குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியாது. பாவச் சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டிருந்த சங்கதி ஒரு மாதம் கழித்து எனக்கு தெரிய வந்தது.

16. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டிருந்த சங்கதியை குறிப்பிட்டுள்ளேன். மேற்படி சொத்துக்கள் எந்தெந்த வங்கியில் எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது என்ற சங்கதியை நான் தெரிந்து கொண்டேன். தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பாக தெரியாது. மேற்படி விபரங்களை பிரதிவாதிகள் எனக்கு வாங்கிக் கொடுக்கவில்லை. ஒப்பந்தம் போடும்போது தாவா சொத்துக்கள் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றும் நான் பணம் கொடுத்தால் தான் வங்கிக் கடனை அடைத்து விட்டு விற்பனை செய்ய முடியும் என்று என்னிடம் சொல்லப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

17. நான் பிரதிவாதிகளிடம் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி மற்றும் பேங்க் ஆப் இந்தியாவில் உள்ள கடன்களை அடைத்து தருவதாக சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு வங்கியின் மேல் அதிகாரியிடம் மிகுந்த செல்வாக்கு இருப்பதாகவும் வங்கி கடன்களை விரைவில் அடைத்து தருகிறேன் என்று நான் சொன்ன வார்த்தைகளை பிரதிவாதிகள் நம்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு ஒரு கோடியே 45 லட்சம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு

ஏக்கருக்கு மேற்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்த நிலத்திற்கு 16 கோடி 13 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி தொகை அன்றைய மார்க்கெட் நிலவரத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ஒரு கோடியே 45 லட்சம் என்பது அன்றைய மார்க்கெட் நிலவரம் ஆகும்.

18. தாவா சொத்துக்கள் தாராபுரம் நகர எல்லைக்குள் உள்ளது என்றால் சரிதான். ஒரு ஏக்கராவின் விலை ஒரு கோடியே 45 லட்சம் ஆகும். நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நானே தன்னிச்சையாக நிர்ணயம் செய்து பிரதிவாதிகளை ஏமாற்றி ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் சரியில்லை தாவா ஒப்பந்தத்தின் முத்திரைத்தாள்களை நான் தான் வாங்கினேன் என்றால் சரிதான். என்னுடைய ஏற்பாட்டில் தான் அது தட்டச்சு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்று சொன்னால் சரியல்ல. அவர் நன்றாக படித்துள்ளார் பாரம்பரியமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் படிப்பறிவு இல்லாததால் என்னை நம்பி நான் காட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

19. வா.சா.ஆ.1 ல் விபரங்களை என்னால் விளக்கிச் சொல்ல முடியும். நான் பிரதிவாதிகளை வா.சா.ஆ.1 ல் உள்ள விபரங்களை படிக்க விடாமல் கையெழுத்து வாங்கி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தில் என்ன வாசகங்கள் கண்டுள்ளது என்பது பிரதிவாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகளை நான் வற்புறுத்தி அடிப்படையில் தான் ஒன்று மட்டும் இரண்டு பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னடைய நிர்பந்தத்தின் காரணமாக பிரதிவாதிகள் மன ஒப்புதல் இல்லாமல் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

20. நாங்கள் எதற்காக கையெழுத்து செய்கிறோம் என்ற விபரம் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் நீட்டிய பக்கத்தில் என்னுடைய வார்த்தைகளை நம்பி பிரதிவாதிகள் கண்மூடித்தனமாக கையெழுத்து செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வங்கிகளில் கடன் பெறும்போது மூத்த வழக்கறிஞர்களின் கருத்துரை பெற்று தான் கடன் வாங்கி உள்ளார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு பிரதிவாதிகள் சொல்லவில்லை. பிரதிவாதிகள் இரண்டு மாதத்தில் சட்டக் கருத்துறை வாங்கி தருவதாக சொன்னதன் அடிப்படையில் நான் ஒப்பந்தம் செய்தேன். 20 19 ஆம் வருடம் தாவா சொத்துக்கள் ஒரு ஏக்கருக்கு 2 கோடியே 40 லட்சம் மதிப்பு கொண்டது என்று சொன்னால் சரியல்ல. சட்டக் கருத்துறையை நான் அறிந்து கொள்ள விரும்பவில்லை என்று சொன்னால் சரியல்ல அதை வாங்கிய பிறகு தான் கிரயம் செய்வதாக முடிவு செய்து இருந்தேன்.

21. ஒரு கோடி ரூபாய் எனக்கு சிறிய தொகை என்று சொன்னால் சரியல்ல. ஒரு கோடி ரூபாய் கொடுத்துள்ள சூழ்நிலையில் சட்டக் கருத்துடைய நான் வாங்கி பார்க்க முயற்சி செய்யவில்லையா என்றால் பிரதிவாதிகள் குடும்பத்தின் மீது நம்பிக்கை வைத்து நான் ஒப்பந்தம் செய்தேன். இதற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவிதமான வரவு செலவு இல்லை என்று சொன்னால் சரிதான். தெரியாத ஒருவருக்கு ரூபாய் ஒரு கோடி கொடுத்துள்ளதற்கு காரணம் என்ன என்றால் என்னுடைய வியாபாரம் அது என்பதால் நான் கொடுத்தேன். சட்டக் கருதுறையில் தெளிவாக இருந்ததால்தான் அதன் அடிப்படையில் நான் பணம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

22. பிரதிவாதிகள் தான் தாவாசொத்தின் பூரண உரிமையாளர்கள் என்பதை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் இரண்டு மாதங்கள் கழித்துதான் இவ்வளவு பிரச்சனை இருக்கிறது என்பது எனக்கு தெரியவந்தது. ஏற்கனவே சட்டக் கருத்துறை பரிசீல செய்து விட்டேன் என்றாலும் பெயரளவில்

வா.சா.ஆ.1ல் சட்டக் கருத்துறை பெற்ற பிறகு முடிப்பதாக வாசகத்தை எழுதி உள்ளேன் என்று சொன்னால் சரி அல்ல. மேற்படி வாசகம் காலம் கடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி போலியான ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமானது என்று சொன்னால் சரியல்ல.

23. வா.ச.ஆ.1 ல் வாங்குபவர் விற்பவர்களின் உரிமை மற்றும் கடமைகள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல அதில் என்ன உள்ளதோ அதுதான் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்த சரத்துக்கள் மீறப்பட்டால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் பிரதிவாதிகள் தங்கள் பங்கை ஆற்றாவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஒப்பந்த தொகையை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்ற வாசகம் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளலாம் என்ற வாசகம் காணப்படவில்லை என்றால் சரிதான்.

24. நான் கிரையம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பரிகாரம் வாங்குவதற்கு நான் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் ரூபாய் 16 கோடி 13 லட்சத்து 85 ஆயிரம் ரூபாயை தயாராக வைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான் என்னிடம் மேற்படி தொகை உள்ளது. என்னிடம் எப்படி தொகை உள்ளது என்பதை காட்ட எந்த விதமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல என்னுடைய வருமானவரித்துறை கணக்குகளை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தொகையை நான் நீதிமன்றத்திலோ வங்கியிலோ வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். 26.8.2019 தேதியில் சிட்டி யூனியன் வங்கி திருப்பூர் கிளையில் வரையப்பட்ட காசோலை எண்001450 ரூபாய் 70 லட்சத்திற்கு 1ம் பிரதிவாதி வசம் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி காசோலை திருப்பப்பட்டு

விட்டது.

**(பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.04.24 19:23:31 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.